IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.133/2013 Date: 12.08.2024

DW2- சாமிநாதன்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தின் சர்வே எண்கள் அனைத்தும் எனக்கு தெரியாது. சர்வே எண்.204/3ன் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு E செட்யூலில் சர்வே எண்.204/3ல் 1.32 ஏக்கர் நிலம் பாகமாக பிரிந்தது என்றால் சரிதான். அதேபோல் செல்லப்பனுக்கும் 204/3ல் 2.24 ஏக்கர் நிலம் பாகமாக பிரிந்தது என்றால் சரிதான். 25.08.2004ல் சண்முகம் என்பவருக்கு வாதிகள், 1ம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் சேர்ந்து 1ம் பிரதிவாதியின் பாக சொத்தை கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதே தேதியில் 1ம் பிரதிவாதியின் பெயரில் நாச்சிமுத்து, சண்முகம் ஆகியோரிடமிருந்து ஒரு சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதே சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கும் இரண்டு கிரையங்களும் 3, 4 பிரதிவாதிகளுக்கு தலா ஒரு கிரையமும் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். சகுந்தலா, ஜெயவேல் கிரையம் வாங்கிய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். வாதியும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து வாழ்வதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல, அவர்கள் சொத்தை விற்றுவிட்டு கோவையில் வீடு வாங்கி குடியிருப்பதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளை ஏமாற்றும் எண்ணத்தில் தாவா தாக்கல் செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டு ஆவணத்தை பார்த்துள்ளேன். நிலம் வாங்கியவர் மூலமாக பார்த்தேன். 1ம் பிரதிவாதி பூர்வீக சொத்துக்களை விற்பனை செய்து தான் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. நான் வாதி சொல்லி கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சாமிநாதன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.